

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## நம் 'சோதனையில்' தள்ளாடவிடாத கர்த்தர்!

எனக்கு ஏன் இந்த சோதனை? என, கர்த்தரை அறியாதவர்கள் கேட்கலாம்! ஆனால், கர்த்தரையும் அவரது உத்தமத்தையும் அறிந்தவர்கள், தங்களுக்கு நேர்ந்த சோதனையின் தெய்வ நோக்கத்தை அறிந்திருப்பார்கள்! 1கொரி.10:13 கூறுகிறபடி, 1) நேரிட்ட சோதனையின் மூலமாய் "என் ஆவிக்குரிய திராணியை" அறிந்து கொள்கிறேன்! "அட, எனக்கு இவ்வளவுதான் பொறுமையா? என்னிடம் இச்சை அடக்கம் இவ்வளவுதானா? சாந்த குணம் குறைவாய் உள்ளதே?" என தங்கள் திராணியை அறிந்து திருந்தி வளருவார்கள்! 2) என் திராணியை அறிந்த கர்த்தர் 'அதற்கு மேல்' என்னை சோதனையில் மூழ்கடிக்க விடமாட்டார் என விசுவாசிப்பார்கள்! கடல் அலைபோல் சோதனை தாக்கினாலும், சீறும் அலையைப் பார்த்து "இம்மட்டும் வா! மிஞ்சி வராதே! இந்த எல்லையில் அடங்கு" என கட்டளையிட்டு நிறுத்துவார்! (யோபு 38:11). 3) இவ்வாறு சோதனையின் நோக்கம் நிறைவேறிய பிறகுதான், சோதனையினின்று இரட்சிப்பையும் தந்து ஆதரிப்பார்! ஆம், தமக்குரியவர்களை சோதனையில் தள்ளாட விடமாட்டார்! அல்லேலூயா.

*-tr*

பெட்டகம் 38 | செப்டம்பர் 2022 | பரல்கள் 09



## 'வழிவிலகாத விசுவாசம்' அவரவர் பொறுப்பு!

தீமோத்தேயுவின் பாட்டி 'லோவிசாளின்' கணவர், விசுவாசி அல்ல! ஆகிலும் தன்னிடமுள்ள, விசுவாசத்தைக் காத்து நடந்ததுமல்லாமல், அதைத் தன் மகள் ஐனிக்கேயாளுக்குள் நிலைத்திருக்கச் செய்தாள் லோவிசாள் பாட்டி! அதுபோலவே, ஐனிக்கேயாள் கணவர் ஒரு புறஜாதி கிரேக்கர்! (அப்.16:1). ஆகிலும், கணவர் விசுவாசியாய் இல்லாத சூழ்நிலையிலும், "தன் விசுவாசத்திற்கு ஏற்பட்ட துன்பங்களைச் சகித்து" கணவரின் 'கிரேக்க மார்க்கத்திற்கு' ஐனிக்கேயாள் சென்றுவிடவில்லை! தன்னிடமுள்ள விசுவாசத்தில் நிலைத்திருந்து, அந்த 'மாயமற்ற விசுவாசத்தை' மகன் தீமோத்தேயுவிடம் நிலைத்திருக்கச் செய்தாள் அவனின் தாய், ஐனிக்கேயாள்!

மாயமற்ற விசுவாசம் பெற்றவர்கள், தேவனுடைய பார்வைக்கு முன்பாக மாத்திரமே ஜீவிப்பார்கள்! லோவிசாள் பாட்டி, அவள் மகள் ஐனிக்கேயாள், அவள் மகன் தீமோத்தேயு ஆகியோரின் விசுவாசம், யாதொரு சூழ்நிலையையும், யாதொரு நபரையும் சார்ந்திருக்கவில்லை!

உத்தம விசுவாசம் பெற்று யாவரும், மாறுபட்ட தங்கள் வீட்டு சூழ்நிலைகளில், தங்கள் விசுவாசத்தை விட்டு விலகவோ, இயேசுவை விட்டு தூரம் செல்லவோ, ஊழியத்தைக் கைவிடவோ, சபையிலிருந்து வழி விலகவோ இல்லை!

*-Ed*


'பரலோக பொக்கிஷங்கள்' வருட சந்தா ரூ.150.00

M.O அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பவும். நன்றி!

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
**G-Pay** : MADURAI CHRISTIAN FELLOWSHIP A/c No: 502087685 IFSC Code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell : 9843049935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## இரவிலும் கீதம் பாடச் செய்யும் ஆண்டவர்!

"முன்பு நடந்த சோகங்களில், என்னை கீதம் பாடச் செய்த தேவன், இன்று நான் சந்திக்கும் இருளான வேளையில், அவரை நான் காண முடியவில்லையே?" என *யோபு* தன் அங்கலாய்ப்பை, யோபு *35:11*-ம் வசனத்தில் பிரதிபலித்தார். அவரைப்போலவே நீங்களும் தவித்து நிற்கிறீர்களோ? படுக்கையில் அங்குமிங்கும் துக்கத்தால் புரண்டு, எப்போது விடியுமென 'அதிகாலை விடியலுக்காக' ஏங்கி நிற்கிறீர்களோ? முன்புபோலவே, நீங்கள் 'தூய ஆவியானவரை' அழைத்துப் பேசியதை, ஏன் இப்போது விட்டுவிட்டீர்கள்?

உங்களை உண்டாக்கிய தேவனை நோக்கி, உங்கள் சிந்தையைத் திருப்புவதே நலமாயிருக்குமென, அவரை நோக்கி முறையிட வேண்டாமா? ஆம், நீங்கள் அப்படிச் செய்தால் மாத்திரமே உங்கள் தனிமையை அவர் போக்கி, கொடிய இரவின் துயரங்களை மாற்றி, முன்புபோலவே உங்கள் இருதயத்தை இனிய கீதங்களால் நிரப்புவார்!

**1. உங்களுக்குப் பிரியமான சிலரை இழந்த துக்கத்தால் 'வருத்தம்' உங்கள் நெஞ்சத்தை அழுத்துகிறதோ?:**

இதுபோன்ற தருணத்தில் தேவன் உங்களிடத்தில் நிச்சயமாய் நெருங்கி வருவார்! இழந்து தவிக்கும் உள்ளத்திற்கு சிறந்த விடையும் தருவார்: "என் மகளே நீ இழந்த உன் நேசத்திற்குரியவன், ஆண்டவராகிய எனக்கும் தேவை என்பதால் நான் அழைத்துக்கொண்டேன்!" என உங்கள் மனதில் அன்புடன் பேசுவார். "நீ இழந்த உன் பிள்ளை அல்லது பிரியமான அவன், என் உள்ளம் கவர்ந்தவன்! பரத்தின் பேராவல் கொண்டவன்! அவன் இப்போது எங்கே இருக்கிறான் தெரியுமா? உன் கண்களுக்கு எட்டாத, பிரகாசம் நிறைந்த தூதர்களின் உயர்ந்த ஸ்தலத்தில், அவர்களோடு ஒருவனாக நின்று, என்னைப் பாடித் துதித்து மகிழ்ந்து கொண்டிருக்கிறான்!" என்ற அவரின் இனிய குரல் கேட்டதும், உங்கள் இருதயத்தில், கனிவான இனிய பாடல் தானாகவே நன்றிப் பெருக்காய் பொங்கிவருவதைக்

*காண்பீர்கள். ஆ, அதுவே அவர் தரும் ஆச்சரியம்! ஆம், தனக்குப் பிரியமானவர்களை இழந்தும், உள்ளத்தில் கர்த்தரோடு கீதம் பாடும் ஆச்சரியம்! 'கர்த்தருக்குள்' தன் மகிழ்ச்சியை பாதுகாத்து வைத்திருக்கும் அனைவருக்கும் இந்த சிலாக்கியம் உண்டு!*

**2. உங்களுக்கு ஏற்பட்ட தோல்வியால் அல்லது சிலருடைய அன்பற்ற செயலால் உங்கள் இரவை தூக்கமின்மை ஆட்கொண்டதோ?:**

*உங்கள் நிலைமையை ஒருவர்கூட புரிந்து கொள்ளாமலே அல்லது உங்கள் உத்தமத்தை புரிந்து கொள்ளாமலே, உங்கள் நண்பர்கள்கூட உங்களை நிந்தித்திருக்கக்கூடும். ஆகிலும், இதுபோன்ற வேளையில் உங்களை நன்கு அறிந்த சிருஷ்டித்த கர்த்தா, உங்களிடத்தில் நெருங்கி வந்து 'ஓர் நம்பிக்கையின் கீதத்தை' உங்கள் இதயத்தில் பாடச்செய்வார்! அவர் தரும் ஆழமான நம்பிக்கை, உங்கள் மனதை இனிய கீதத்தால் நிரப்பிவிடும். இந்த இனிய வேளையில், உங்கள் சிருஷ்டிகர் தந்த பாடல்களை மெதுவாய் பாடி மகிழுங்கள்!*

*இவ்வித இனிய அனுபவம் பெற்ற நீங்கள், அடுத்த முறை ஏதாகிலும் 'ஒரு இரவுநேரம்' உங்களைச் சந்திக்கும்போது "நான் என்ன செய்வேன்? இரவு வந்துவிட்டதே! பகல் வெளிச்சம் மறைந்துவிட்டதே" என மனம் கலங்காதிருங்கள்.*

> **பாருங்கள், உங்களுக்கு ஏற்பட்ட சூழ்நிலையின் சீற்றத்தால், அந்தி மயங்கி இருள் சூழ்ந்தாலும், நீங்கள் கலங்கிட இனி தேவையில்லை. சற்று வெளியே வந்து பாருங்கள்! 'பகலில் காண முடியாத' அற்புதமான மின் மினி நட்சத்திரங்களால், 'உங்கள் ஆகாய விரிவு' ஜொலித்திருப்பதைக் கண்டு மகிழுங்கள்!**

*ஒரு உண்மை புரிந்து கொள்ளுங்கள்: ஒரு பெரிய கப்பலின் வலிமை, அதை அடித்து மோதிய* **'கடல் சூறாவளியை'** *வைத்தே அறிந்து கொள்ள முடியும்! நம் இயேசு ஆண்டவரின் சுவிசேஷ வல்லமையை* **'அக்கினிமயமான சோதனைகளை'** *சந்தித்த ஒரு கிறிஸ்தவனால் மாத்திரமே விளங்கச் செய்திட முடியும்! இவ்வித உறுதி கொண்ட ஒருவனையே "அவர் இரவிலும் கீதம் பாடச் செய்வார்!" இந்த மாறாத உண்மையை நிகழ்த்தி காண்பித்திட, உங்கள் வானத்தை, தேவன் முதலாவதாய் 'இரவாய்' மாற்ற வேண்டிய அவசியத்தை, மறந்துவிடாதீர்கள்! என, பரிசுத்தவான் வில்லியம் டெய்லர் அவர்கள் கூறினார்! ஆம், உங்கள் இருளான வானத்தில், மின்னும் நட்சத்திரங்கள் நிச்சயமாய் தோன்றும்! நீங்கள் கீதம்பாடி மகிழுவீர்கள்!*

*- Mrs.சார்லஸ் கௌவ்மென்*

## 'புறங்கூறுவது' கொலை குற்றத்திற்குரிய தீமை!

*ஓர் பிரதானமான அக்கிரமத்தைக் குறித்து நாம் காண வேண்டியது அவசியம். அதுஎன்னவென்றால், "ஒருவரின் பின்னாலிருந்து கடிப்பது"* (Back Biting)*! இந்த உண்மையை அறிந்த சில தேவதாசர்கள் கூறும் வார்த்தைகளை கேட்டிருக்கிறேன். அது என்னவெனில்:* **"யுத்த காலத்தில் மரித்தவர்களைக் காட்டிலும், நாவினால் கொல்லப்பட்டவர்கள் அதிகம்!"** *என்பதுதான். நாவை பிரயோகித்து செய்திடும் கொலையில் பல ரகங்கள் உண்டு. உதாரணமாக, பகிரங்கமாய் சிலரைப் புறங்கூறி, அவர்களைக் கொன்றிருக்கிறார்கள்! சில சமயங்களில், கொன்றதுபோல் தோன்றாவிட்டாலும் 'கொலை முயற்சி' செய்திருக்கிறார்கள்! கொலையோ அல்லது கொலை முயற்சியோ ஆகிய எதுவாயிருந்தாலும் கொலையின் நோக்கமெல்லாம் "மற்றொரு நபர் வைத்திருக்கும் நற்பெயரை சீரழிக்க வேண்டும்" என்பதே இவர்கள் மேற்கொண்ட கொலை! உங்கள் சொந்த வாயிலிருந்து புறப்பட்ட 'தீதான புறங்கூறுதல்' சிலரை கொலை செய்கிறது என அறிவது பயங்கர நிகழ்ச்சியாய் காணப்படுகிறதல்லவா!*

*'தேவனுக்குப் பயந்து வாழ்பவன்' என கூறிக்கொள்ளும் ஒரு நபர் புறங்கூறும் பாவத்துக்கு எப்படித் துணிய முடியும்? உங்களைச் சுற்றிலும், அதாவது விசுவாசிகளின் மத்தியில், இதுபோன்ற கொலை நிகழ்ச்சிகள் வெகு சாதாரணமாய் நடப்பதை உங்களால் காண முடியவில்லையா? விசுவாசிகளாய் இருந்து கொண்டே ஏன் அப்படிச் செய்தார்கள்? விடை இதுதான்: "அவர்கள் புறங்கூறுதலை வெறுக்கவில்லை!" அவ்வளவுதான்.*

> **புறங்கூறுதலை வெறுக்காதபடியால் 'அவர்களின் வெறுப்பு' இருதயத்துக்குள் ஆழமாய் சென்றுவிட்டது. "சகோதரனை வெறுக்கிறவன் மனுஷ கொலைபாதகன்" என யோவான் தன் நிருபத்தில் உரைத்ததையும், இயேசு தன் மலைப் பிரசங்கத்தில் உரைத்ததையும் ஒப்பிட்டுப்பார்த்தால் "புறங்கூறும் வெறுப்பை" தனக்குள் வைத்துக்கொண்டவன் 'கொலையாளி' என்ற உண்மையை நீங்கள் அறிந்து கொள்ள முடியும்!**

*ஆமோஸ் 5:15 கூறுகிறபடி "நீங்கள் தீமையை வெறுத்த பின்பே நன்மையை விரும்ப முடியும்! அப்போது மாத்திரமே, ஒலிமுக வாசலில் நியாயத்தை உங்களால் நிலைப்படுத்த முடியும்" என வாசிக்கிறோம். ஆனால் நீங்களோ, நான் தேவனுடைய வார்த்தையை நேசிக்கிறேன்! வேத வாக்கியங்களை திரும்பத் திரும்ப வாசிக்கிறேன் என்றெல்லாம் நீங்கள் கூறுவது: "வார்த்தையை அன்புகூர்ந்து அதை*

உங்கள் நாவினால் மாத்திரமே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்!" ஆமோஸ் கூறுகிறபடி 'நியாயத்தை நிலைப்படுத்தாமல் அல்லது வாழாமல்' பேசிக்கொண்டே இருப்பது மாய்மாலம் அல்லவா? உங்கள் முகத்துக்கு நேராகவே சொல்ல விரும்புகிறேன் "கர்த்தருடைய வார்த்தையை நேசிக்கிறேன் என கூறிவிட்டு, தீமையை வெறுக்காத நீங்கள் ஒரு பொய்யன்!" அப்படியானால், **நீங்கள் கர்த்தருடைய வார்த்தையை நேசித்துப் பிரசங்கித்தது** அனைத்தும், உங்களையே ஏமாற்றி வஞ்சித்துக்கொண்டதற்கு சமம் என்பதை உறுதிபட அறிந்துகொள்ளுங்கள்! "தீமையை வெறுத்து நன்மை செய்வதே நியாயம்" எனக்கூறும் இந்த வசனத்தை மகிமை நிறைந்த வசனமாகவே நான் கருதுகிறேன். அதுஏனென்றால், 'நன்மையை நேசிக்கும் சந்தர்ப்பத்தைவிட' சோதனை நேரத்தில் 'தீமையை வெறுக்கும் சந்தர்ப்பமே' எனக்கு அதிகமாய் கிட்டுகிறது! என்பதுதான்.

இன்று முதல், உங்களை நெருங்கி வரும் சோதனையில் தீமையை வெறுத்து வாழுங்கள்! அப்போது, சோதனைக்குள் சிக்கிகொள்ள மாட்டீர்கள்! சொல்லி முடியா வாழ்வு தரும் இயேசுவின் நல்ல மாதிரி ஜீவியத்திற்காக, அவருக்கே இன்றும் என்றும் சதா காலமும் மகிமை உண்டாவதாக!

- எலியாஸ் அஸ்லாக்சன்

---

## 'ஜெனிவா பிஷப்' எனக்கிழைத்த துன்பத்திலிருந்து ஓயவில்லை!

பிஷப் அவர்கள், தந்தை லா- கோம்பேயை அவமானமாய் நடத்திய சம்பாஷணையை கேள்வியுற்ற நான், மனம் வேதனையடைந்து ஜெபிக்கத் துவங்கினேன். ஜெபம் ஒன்று தவிர, எனக்கு ஆதரவாக ஒன்றையும் நான் பற்றிக்கொண்டு வாழ்ந்தது இல்லை. இச்சமயத்தில், என் ஒரே மகளை நான் ஒப்படைத்த கன்னியாஸ்திரீயிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது: "நான் தற்சமயம் வியாதிப்பட்டு இருக்கும் இந்த நேரத்தில், எங்கள் ஸ்தலத்திற்கு நீங்கள் வருகை தந்து, நான் சுகம் பெறும்வரை தங்கள் மகளுக்கு ஆதரவாய் சிலகாலம் எங்கள் மடத்தில் இருக்கும்படி தயவாய் வேண்டுகிறேன்" என எழுதியிருந்தார்கள். இந்த கடிதத்தை எடுத்துக்கொண்டு எங்கள் மடத்து சிஸ்டர்களிடம் காண்பித்தேன். மேலும், நான் என் மகளினிமித்தம் சில காலம் அங்கே போவதற்கு விரும்புகிறேன் எனவும் தெரிவித்தேன்.

இந்த கடிதத்தைப் பார்த்த பிறகு, எனக்கு அவர்கள் செய்து வந்த துன்புறுத்தலை நிறுத்திக்கொண்டு, தந்தை லா - கோம்பே அவர்களிடம் மீண்டும் ஓர் சமாதான உறவு ஏற்படுத்திக்கொண்டால்

*நலமாயிருக்குமென்று எண்ணினேன். இவ்வாறு சுமுகமாய் காரியம் மாறிவிட்டால், என் மகளை கவனித்து வரும் கன்னியாஸ்திரீ சுகம் பெற்றவுடன், இந்த மடத்திற்கே திரும்பி வந்து விடலாம் என்றே தீர்மானித்தேன்! ஆனால் அதற்கு பதிலாக, அவர்கள் எனக்கு இளைத்து வந்த துன்பத்தை பன்மடங்காக மாற்றினார்கள்! தலைமை பாரீஸ் நகரத்திற்கு என்னைக் குறித்து கடிதம் எழுதினார்கள்! எனக்கு வந்த கடிதங்களையெல்லாம் நிறுத்தி வைத்தார்கள்!*

**என்னுடைய நற்பெயருக்கு தீமை கொண்டு வரும் பொய்யான அவதூறுகளை பாரீஸ் நகரத்திலுள்ள எல்லா மடத்திற்கும் தெரிவித்து கடிதம் எழுதினார்கள்!**

மகள் தாபரமாய் இருந்த *டோனான்* ஊர் மடத்துக்கு செல்வதற்கு ஆயத்தமானேன். அதே சமயம் 'லென்ட்' என்ற ஸ்தலத்திற்கு தந்தை லா - கோம்பே அவர்கள் பிரசிங்கிப்பதற்கென்று புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தார்கள். இந்த தகவல்களை சொல்லிச் செல்வதற்காக தந்தை லா - கோம்பே அவர்கள் என்னை சந்தித்து, *லென்ட்* ஊரிலிருந்து, *ரோம்* நகரம் செல்ல இருப்பதாகவும் கூறினார். அப்போது என்னைப் பார்த்து மிகுந்த வருத்தத்தோடு "உங்களுக்குப் பழக்கம் இல்லாத இந்த *ஜெனிவா நகரின்* மடத்தில் தனியே விட்டுச் செல்வதற்காக வருந்துகிறேன். என் ஊழிய பயணத்திற்குப் பிறகு ரோம் நகருக்கும் செல்ல வேண்டிய நிலை உள்ளது. அங்கிருந்து நான் திரும்பி வரக்கூடிய சாத்தியநிலை இல்லை. **அனேகமாக நான் பிஷப்மார்களால் சிறைப்பிடித்து வைக்கப்படும் நிலையும் ஏற்படலாம் என்றே கருதுகிறேன்!** உங்களுக்கோ இந்த ஸ்தலத்தில் யாதொரு ஒத்தாசையும் இல்லை. மாறாக, நீங்கள் எல்லோராலும் துன்புறுத்தப்படுவதை நினைத்தே கலங்குகிறேன்!" என்று கூறினார்.

*நான் சற்று மௌனத்தோடு, நிதானமாய் "மதிப்பிற்குரிய தந்தை அவர்களே, எனக்கு வர இருக்கும் துன்பத்தைக் குறித்து யாதொரு வலியும் எனக்கு ஏற்படவில்லை. என்னை சந்திக்கும் 'சிருஷ்டிப்புகளை' தேவனுக்காகவே நான் அனுகூலமாக்குகிறேன்! ஏனெனில், அவர் கட்டளையிடாமல் யாதொன்றும் எனக்கு சம்பவிப்பது இல்லை. கர்த்தருடைய இரக்கத்தால் நான் சுகமாய் இருப்பேன்! யாருடைய ஒத்தாசையும் எனக்கு இல்லாதிருப்பது, ஒரு பொருட்டல்ல! உங்களை நான் மீண்டும் காண முடியாத நிலை ஏற்பட்டாலும் மனஆறுதல் பெற்றிருப்பேன். கர்த்தருக்குச் சித்தமாயிருந்தால், உபத்திரவங்களை மனநிறைவோடு கடந்து வருவேன்!" என்று நான் பதில் கூறினேன். அதற்கு அவர் "உங்களின்*

*ஆவிக்குரிய இவ்விதமான நிலையைக் கண்டு மனதிருப்தியாய் செல்கிறேன்!" எனக் கூறி, விடைபெற்றார்.*

இச்சமயத்தில், நான் முன்பு குறிப்பிட்ட மிகவும் வயது சென்ற பரிசுத்த துறவி என்னைத் தேடி வந்தார். அவர் பொதுவாக, சுமார் 20 ஆண்டு தெய்வ சஞ்சாரத்திற்கு பிறகே வெளி உலகத்துக்கு வருவார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். என்னைக் குறித்த ஓர் தரிசனமும் அதைத் தொடர்ந்து ஒரு பாரமும் அவருக்கு ஏற்பட்டதாகக் கூறினார். அதுஎன்னவெனில்: "ஒரு பெண்மணி படகில் ஏறி ஆற்றில் பயணம் செய்தார். அச்சமயம், *ஜெனிவா பிஷப்* அவர்களும் அவரோடு சேர்ந்து வந்த பாதிரிகளும் அந்த பெண்மணி சென்ற படகை ஆற்றில் மூழ்கடிப் பதற்கு பல முயற்சிகள் கையாண்டார்கள்" என கூறினார். மேலும் தொடர்ந்து, இந்த தரிசனத்தைக் கண்ட என் மனதில் மிகவும் சஞ்சலம் ஏற்பட்டது. கிட்டத்தட்ட சுமார் 2-மணி நேர இடைவெளியில், படகில் சென்ற பெண்மணி மூழ்கிவிட்டதைப் போலவும், இனி அவள் இல்லை என்பதைப் போலவும் தோன்றியது. ஆனால் சிறிது நேரத்தில் மீண்டும் அவள் படகில் இருப்பதைக் கண்டேன்! அந்தப் பெண்மணியோ, இந்த அபாயத்திலிருந்து தப்பித்துக்கொள்ள மனதுடையவளாய் காணப்பட்டாள். ஆனால்....

**ஜெனிவா பிஷப் அவர்களோ, அந்தப் பெண்ணை துரத்தும் தீமையில் ஓய்ந்த பாடில்லை! நான் விந்தையாய் கண்டது என்னவெனில் "இந்தப் பெண்மணியோ எப்போதும் போல் அமைதியாக இருந்தாள்!" என அந்த துறவி கூறி முடித்தார்.**

முடிவாக, அந்த துறவி என்னைப் பார்த்து "சகோதரியே, இந்த *பிஷப்* உங்களுக்கு இடைவிடாத உபத்திரவம் தருவார் என்ற உண்மையை இந்த தரிசனத்தில் நான் கண்டேன்" என கூறி முடித்தார். நான் குறிப்பிட்டதைப்போல், தந்தை லா - கோம்பே அவர்கள் ஏற்கெனவே இந்த நிகழ்ச்சியை எனக்கு கூறியிருந்தபடியால், எந்த மனக்கிலேசமும் என்னை ஆட்கொள்ளவில்லை!

என் சொந்த பிரதேசத்திலுள்ள **'கவர்னர் மனைவி'** முன்பு எனக்கு சிறந்த சிநேக தோழியாய் இருந்திருக்கிறார்கள். இதைக் குறித்து, நான் ஏற்கெனவே ஒரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். "நான் எல்லாவற்றையும் தேவனுக்காக துறந்து, அவருக்கென பணியாற்றுகிறேன்" என்பதை இவர்கள் கேள்விப்பட்டார்கள். என்னைப்போலவே அவர்களும் தேவனை அன்புகூர்ந்து, எல்லாம் துறந்து, தேவனுக்கு பணியாற்ற விரும்பினார்கள். இந்த மனநிலையில், தனக்குரிய எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டு, நான் இருக்கும்

ஜெனிவா ஆசிரமத்திற்கு வந்துவிட தீவிரம் கொண்டிருந்தார்கள்! ஆனால், ஜெனிவா ஆசிரமத்தில் எனக்கு ஏற்பட்ட உபத்திரவங்களைக் கேட்டவுடன், அங்கு வருவதற்கு தயங்கி நின்றுவிட்டார்கள்! அதன் பின்பு, பக்தி நிறைந்த அந்த தோழி மரித்துவிட்டதை கேள்விப்பட்டு மனம் வருந்தினேன். "உத்தம இயேசுவின் தொண்டர்களுக்கு ஏற்படும் உபத்திரவங்களைக் கொண்டு வருவது, ஆவிக்குரிய மனிதர்களைப்போல் காணப்படும் சில கிறிஸ்தவர்கள்!" என அறிவதும், இவர்களே கிறிஸ்துவின் உத்தம சீஷர்களுக்கு இடறல் செய்யும் கற்களாய் மாறுவதையும் கண்டு, நான் மிகுந்த துக்கம் அடைந்தேன்!

- மேடம் குயான்

---

## நீங்கள் இன்னமும் 'பரிசுத்தாவி அபிஷேகம்' பெறவில்லையோ?

பரிசுத்தாவி அபிஷேகம் பெறுவதை "ஏதோ ஒரு உபதேசத்தைப் போல் காண்பித்து" ஜனங்களிடமிருந்து, தேவன் வழங்கிய செல்வத்தை சத்துரு அபகரித்து கொள்கிறான். இவ்வாறு ஆவியில் நிறைந்த வாழ்க்கையை "குழப்பத்தில் வைத்து" "தவறான கருத்துக்களை உருவாக்கி"....விசுவாசிகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற முடியாதபடி வெகு தூரத்தில் வைத்து விடுகிறான்! இயேசு தன் இரத்தம் சிந்தி வழிவகுத்த "**பிதாவின் வாக்குதத்தத்தை**" கிறிஸ்துவின் சபையினர் பெற்றுக்கொள்ள முடியாதபடி, இன்றுவரை சாத்தான் தீவிரமாய் செயல்படுகிறான்!

ஆவியில் நிறைந்த ஜீவியம் 'ஏதோ கைகூடாத ஜீவியம்' என அவிசுவாசத்தோடு புறக்கணிக்கும் கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். ஆனால், **இந்த அபிஷேகம்,** தேவன் தன் ஜனத்திற்கென்று வைத்திருக்கும் பூரணதிட்டத்திற்குரிய பங்கே ஆகும்! பரிசுத்த ஆவி அபிஷேகம் உங்களுக்கு வந்து சேர வேண்டிய உரிமை என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்! அப்போது மாத்திரமே, அபிஷேகத்தைப் பெறுவதற்கு, உங்கள் நெஞ்சில் அடித்துக் கொண்டு, தரையில் ஓங்கி குத்திக்கொண்டு கேட்டால்தான் அபிஷேகம் கிடைக்கும் என்ற மாயையிலிருந்து நீங்கள் விடுபடுவீர்கள்!

**இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவன் அருளுகின்ற "பிதாவின் வாக்குத்தத்தம்" உண்டு என்பதை மாத்திரம் தியானித்து அவரிடம் கேளுங்கள்! நிச்சயமாய் பரிசுத்தாவி அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வீர்கள்! இதற்காக நீங்கள் தேவனிடம் மன்றாடி கேட்க வேண்டுவதுபோல் ஒருபோதும் எண்ணிக்கொள்ளாதிருங்கள்!**

கர்த்தருடைய சிறந்த ஊழியன் *சிம்சன்* அவர்கள் இதை விவரித்து

*கூறும்போது "ஒருவன் ஆவியில் நிறைவதென்பது, சுவாசிப்பதற்கு ஒப்பான எளிய செயலே ஆகும்! நீங்கள் மூச்சை வெளியேவிட்டு மீண்டும் உள்ளே இழுப்பது எவ்வளவு எளிதோ,* **அவ்வளவு எளிது** *என விசுவாசியுங்கள்" என்றே கூறினார்.*

*நீங்கள் பரிசுத்த ஆவியினால் நிறைவதற்கு முன்பாக,* **பரிசுத்த ஆவியினால் நிறைய வேண்டும் என்ற விருப்பம்** *உங்களுக்கு இருக்கிறதா? என்பதை உறுதி செய்யுங்கள். "என் சொந்த ஆவியின் இருப்பிடத்தில்... பரிசுத்த ஆவியானவர் ஆட்கொள்வது எனக்கு நலமாயிருக்கும் என்பதில் நீங்கள் உறுதியாய் இருக்கிறீர்களா?" ஏனெனில், ஆவியானவர் உங்களை ஆட்கொண்டு விட்டால், இனி அவர்தான் உங்கள் முழு வாழ்க்கையையும் ஆண்டு நடத்தும் ஆண்டவராய் இருப்பார்!*

**இப்போது நேர்மையாய் சொல்லுங்கள்: உங்கள் முழு வாழ்க்கைக்குரிய 'சாவி- கொத்தையும்' பரிசுத்த ஆவியானவரிடம் மனப்பூர்வமாய் ஒப்படைத்துவிட மெய்யாகவே விரும்புகிறீர்களா? நானே நடந்த வாழ்க்கை, முற்றிலும் வீணானது என்பதை தெள்ளத் தெளிவாய் அறிந்தவன் மாத்திரமே, தன் இஷ்டத்திற்கு சீர்கெட்டு வாழ்ந்த தன் சாவி-கொத்தை பரிசுத்த ஆவியானவரிடம் ஒப்படைப்பான்!**

*இவ்வளவு முக்கியமான பரிமாற்றம் ஏற்பட வேண்டியதாய் இருக்கிறபடியால்தான், நீங்கள்பரிசுத்த ஆவியை பெறவேண்டுமென்றால்* **"உங்கள் முழு சரீரத்தையும்"** *தேவனுக்கு ஒப்புக்கொடுத்து விட வேண்டும்! என ரோமர் 12:1,2 வசனம் கூறுகிறது. இந்த ஆசீர்வாதமான நிலைக்கு வந்த பிறகுதான், பரிசுத்த ஆவியை உங்களுக்குத் தரும்படி நீங்கள் தேவனிடத்தில் கேட்க முடியும் (லூக்.11:9-11).*

*மேலும், அப்போஸ்தலர் 5:32 வசனம் கூறுகிறபடி* **"கீழ்ப்படிய மனதுள்ளோருக்கே"** *பரிசுத்த ஆவியை தேவன் தருகிறார்! என்பதையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும். தேவனிடத்தில் பக்தி கொண்ட யாராக இருந்தாலும், வேத வாக்கியங்களுக்கு கீழ்ப்படிவதை மிக அருமையானதாக கொண்டிருப்பார்கள். வேதவாக்கியங்களை எவ்வளவு புரிந்து கொண்டீர்களோ, அவ்வளவு கீழ்ப்படிய வேண்டும்! இது, மிக எளிதான வாழ்க்கை! ஆவியில் நிறைந்த வாழ்க்கை, உங்கள் வாழ்வில் மாற்றம் தரும் புரட்சியை கொண்டு வரும்!*

*கடைசியாக கலாத்தியர் 3:2 கூறுகிறபடி, ஒருவன்* **விசுவாசித்தால் மாத்திரமே** *பரிசுத்தாவியைப் பெற்றுக் கொள்ள முடியும்! இரட்சிப்பை, எப்படி நீங்கள் விசுவாசத்தால் பெற்றீர்களோ, அதுபோலவே பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை, நீங்கள் விசுவாசத்தால் பெற்றுக் கொள்ள முடியும்!*

*கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்பத்தில், நீங்கள் மனம்திரும்புவதற்கு பரிசுத்த ஆவியானவர் உதவி செய்கிறார்! அப்படியில்லாமல் நீங்கள் மனம் திரும்புவதுகூட உங்களால் இயலாது. ஆனால் இப்போதோ உங்கள் முழு சரீரத்தையும், முழு மனதையும், முழு இருதயத்தையும்.... இவ்வாறு* **உங்கள் முழுமையையும்** *மிகுந்த தெய்வபயத்தோடு, உங்களை தாழ்த்தி, பரிசுத்த ஆவியானவரிடத்தில் ஒப்படைத்து விடுங்கள். இந்த இனிமையான நேரமே, ஆவியானவர் உங்களை முழுவதும் ஆட்கொள்ளும்* **அபிஷேக நேரமாய்** *மாறும்! ஆம், விசுவாசத்தோடு உங்கள் தேவனிடத்தில் சென்ற நீங்கள், உங்களுக்குள் வாசம் செய்யும்படியான பரிசுத்த ஆவியானவரை இப்போதே பெற்றுக் கொள்வீர்கள், அல்லேலூயா!*

*- A.W.டோசர்*

---

## வேத பண்டிதமா? பரிசுத்த ஆவியினால் மறுரூபமா?

*"வேத வாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" (2தீமோ.3:16). "தேவனுடைய பரிசுத்த மனுஷர்* **பரிசுத்த ஆவியினாலே** *ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2பேதுரு1:21). இப்படி வேதமானது, தேவ ஆவியினாலே உண்டாயிருக்கிறபடியால்* **அவருடைய போதனையின்றி** *நாம் வேத வாக்கியங்களை அறிந்துகொள்ள முடியாது. ஒரு பூட்டை அதற்குரிய திறவுகோலால் திறக்க வேண்டும். வேதத்திலுள்ள இரகசியங்களை நமக்குத் திறந்து காட்டக்கூடிய* **திறவுகோல் பரிசுத்த ஆவியானவர்தான்!**

*தேவ இரகசியங்களில் அதிகமானவைகளை அறிந்துகொண்ட பவுல் என்ன சொல்லுகிறார்? "மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்! நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல் தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிடமிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்" என்றார் (1கொரி.2:11,12).*

**பரிசுத்த ஆவியினால் உண்டாகாத வேத அறிவு, வேதபாரகர் பரிசேயர் என்பவர்களின் அறிவுக்கு ஒப்பானது. ஏனெனில், அவர்கள் வேதத்தைத் தாங்கள் நன்றாய் அறிந்துவிட்டதுபோல எண்ணிக்கொண்டார்கள்!**

*கர்த்தராகிய இயேசுவைப் பிடிக்க, மனமில்லாமல் திரும்பிவந்த சேவகர்களைப் பார்த்து:*

*"வேதத்தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள்" என்று இந்த வேதபாரகர்கள் திட்டினார்கள் (யோவான் 7:49). "தேவ குமாரனையே சிறைப்பிடித்திட" தங்கள் வேத அறிவை பயன் படுத்தினார்கள்! அதேசமயம், மற்றவர்களுடைய பார்வையிலும் வேதத்தில் வல்லவர்களெனவே எண்ணப்பட்டு வந்தார்கள்!*

ஏரோது இராஜா இவர்களை அழைத்து, கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பார் என்று விசாரித்தபொழுது "யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார், அதேனென்றால்: யூதேயாவிலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல, என் ஜனமாகிய **இஸ்ரவேலை ஆளும் பிரபு** உன்னிடத்திலிருந்து புறப்படுவார்" என்று தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது என்பதாக மீகா 5:2-ல் இருந்து நிரூபித்தார்கள். இவர்களுடைய வேத அறிவைக் குறித்து ஆவியானவர் கொடுக்கிற சாட்சியென்ன? "எருசலேமில் குடியிருக்கிறவர்களும் அவர்கள் அதிகாரிகளும் **அவரை அறியாமலும்** ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற **தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை அறியாமலும்** அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்கள்" என்பதே (அப்.13:27). தேவனோ அவர்களை வேதம் அறியாதவர்களென்று தீர்த்துப்போட்டார்! மாம்சத்துக்குரிய இவர்கள் ஆவிக்குரிய சத்தியங்களை அறிந்துகொள்வதெப்படி? ஸ்தேவான் இவர்களைப் பார்த்து: உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் 'பரிசுத்தஆவிக்கு' எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள், என்றார் (அப்.7:51).

கிறிஸ்தவ பாடசாலைகளில் படித்துத் தேறிய வேற்று மத மாணாக்கர்களில் சிலர் நம்மைப் பார்த்து: "உங்கள் வேதம் எங்களுக்குத் தெரியாதோ? பைபிளை எத்தனையோதரம் வாசித்திருக்கிறோம். எங்கே கேள்வி கேட்டாலும் உத்தரவு கொடுப்போமென்று" பெருமையாய் பேசுகிறதுண்டு! அவர்கள் வேதம் படித்தது மெய்தான். சில சமயங்களில் வேதபரீட்சையில், கிறிஸ்தவப் பிள்ளைகளைவிட இந்து மாணாக்கர்கள் முதல் தரமான வெகுமானங்களைப் பெற்றுமிருக்கிறார்கள்! இதினாலே அவர்களை 'வேதமறிந்தவர்கள்' என்று நாம் எப்படிச் சொல்லலாம்? அவர்கள் 'புத்தியினால்' வேத சரித்திர வாக்கியங்களைக் கற்றுக்கொண்டார்களேயன்றி, **பரிசுத்த ஆவியினால் போதிக்கப்பட்டவர்களல்ல!** தங்கள் பாவங்களை ஒவ்வொரு நாளும் உணர்ந்து மனந்திரும்பாதவர்களுடைய வேத அறிவு, எப்படிப்பட்ட அறிவு? தங்களுக்காக ஜீவனைக்கொடுத்த ஆண்டவரை ஏற்றுக்கொள்ள மனதில்லாமல், அவரை அசட்டை செய்கிறவர்களுடைய அறிவு எப்படிப்பட்டது?

**இப்படிப்பட்டவர்கள், வேத சத்தியங்களுக்கு எதிர் நியாயம் பேசத்துணிந்தார்களேயன்றி, சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்படுகிறதைக் காணோம்!**

*தேவ ஆவியானவர் ஒருவனுக்கு வேதம் போதித்தால், அவன் உணர்வடைந்து திருந்துவதை முன்வைத்தே போதிப்பார்! "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும், அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை* **அறியவுமாட்டான்**" *என்றே எச்சரித்து எழுதப்பட்டுள்ளது (1கொரி.2:4).*

*கிறிஸ்தவ விசுவாசிகளுக்குள்ளும் வேதத்தில் நிபுணரென் றெண்ணப்படுகிறவர்கள் இல்லையோ? எத்தனையோ பண்டிதர்கள் கிறிஸ்தவ உலகில் இருக்கிறார்கள்! ஆகிலும் அவர்களில் அனேகர், தங்கள் சொந்த அறிவின்படிதானே ஜீவிக்கிறார்கள்? அவர்களிடம் எத்தனை மீறுதல்கள், எவ்வளவு பாவங்கள்! இதையெல்லாம் காணும்போது, தேவனுக்கு முன்பாக அதிக வெட்கத்தோடு அறிக்கை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். இயற்கையான சுபாவ அறிவுக்கும், ஆவியானவராலுண்டாகும் அறிவுக்கும் வித்தியாசம் இதுதான்: பரிசுத்த ஆவியினால் நாம் போதிக்கப்படும்பொழுது தேவனுடைய இரகசியங்களை நாம் அறிந்து கொள்ளுகிறது மாத்திரமல்ல, அறிந்து கொண்ட சத்தியங்களுக்குக் கீழ்ப்படிகிறவர்களாயுமிருப்போம்!*

**பரிசுத்த ஆவியின் போதனையும் பரிசுத்த ஜீவியமும் சேர்ந்தே வளரும். நம்முடைய ஜீவியத்தில் மாறுதலையுண்டாக்காத வேத அறிவு பரிசுத்தாவியினால் உண்டானதல்ல!**

*மேலும் 'சொற்பகாலம்' ஆவியானவரால் போதிக்கப்பட்ட அவருடைய சீஷர்கள், அநேக வருஷமாய் வேதத்தில் அப்பியாசமுள்ளவர்களும் பிரமிக்கத்தக்கவிதமாய் 'தேவனுடைய இரகசியங்களை' எடுத்துக்கூறும் திறமையுடையவர்களாயிருந்தார்கள்! அப்போஸ்தலர்களிடத்தில் இந்த மாறுதலையே நாம் காண்கிறோம். கிறிஸ்துவானவர் அவர்களுக்கு உபதேசித்த அநேகம் விஷயங்களை அவர்கள் உடனே அறிந்துகொள்ளவில்லை.* **ஆவியானவரைப் பெற்றுக்கொண்ட பின்பே** *எல்லாவற்றையும் தெளிவாய் அறிந்து கொண்டார்கள். "இவைகளை அவருடைய சீஷர்கள் துவக்கத்தில் அறியவில்லை,* **இயேசு மகிமையடைந்தபின்பு,** *இப்படி அவரைக் குறித்து எழுதியிருக்கிறதையும், தாங்கள் இப்படி அவருக்குச் செய்ததையும் நினைவுகூர்ந்தார்கள்" (யோவான் 12:16).*

"நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டியதில்லை, **அந்த அபிஷேகம்** சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக" (1யோவான் 2:27). இந்த பாக்கியமே, நம் எல்லோருக்கும் உண்டாயிருப்பதற்கு தேவன் விரும்புகிறார்!

- பரமானந்தம் ஐயர்

---

## தேவன்மீது கொண்ட பசியே, ஆத்துமாவை திருப்திபடுத்துகிறது!

தேவன் மீது ஆர்வமும், கிறிஸ்துவின் மீது யாதொரு அன்பும், ஆவிக்குரிய விஷயங்களில் எவ்வித பிரியமும் இல்லாதவர்கள், தங்கள் பாவங்களிலும் மீறுதல்களிலும் சிக்கி மாய்வார்கள் என்றே கூறவேண்டும்! இதுபோன்றவர்கள், ஆவியானவருடைய எந்த உணர்த்துதலுக்கும் '**உணர்வற்றவர்களாகவே**' இருப்பார்கள். இவ்வித ஆவிக்குரிய மயக்கநிலையில் தொடர்ந்து இருப்பவர்கள், 'நித்திய மரணம்' சம்பவிக்கும் அபாயத்திலிருக்கிறார்கள்!

ஒருமுறை, ஒரு மனிதன் என்னிடம் பேசியபோது, தான் வடபிரதேசம் சென்ற சமயத்தில், குளிரில் நிலைகுலைந்து, உறைந்துபோகும் அபாயத்திலிருந்ததாகக் கூறினார். கைகள் உணர்ச்சி இழந்து, கால் நரம்புகள் உறைந்ததால், தடுமாறி குளிர்ந்த பனியில் விழுந்து, ஓர் மயக்கமான தூக்கத்தால் ஆட்கொள்ளப்பட்டதாக கூறினார். திடீரென்று, "**சரீரம் உறைந்து மரிக்கப்போகிறோம்**" என்ற உணர்வு மனதில் பட்டவுடன் குதித்தெழுந்து, அங்குமிங்கும் கைகளையும் கால்களையும் உதைத்து ஓடிய பிறகு அவருடைய "இரத்த ஓட்டம்" சூடேறி, உடலெங்கும் இரத்தம் ஓடத் துவங்கியதாகக் கூறினார்! ஒருவேளை, தான் மரித்துக்கொண்டிருக்கிறோம் என்ற உணர்வுவைப் பெறாமலும், அந்த உணர்வுக்கு ஏற்றப்படி கிரியை செய்யாமலுமிருந்திருந்தால், தான் நிச்சயமாய் அந்த கொடிய பனியில் மரித்திருக்கக்கூடும், என கூறினார்!

**ஆகவே, ஆவியானவரின் எச்சரிக்கைகளுக்கு உடனடியாக உணர்வடைந்து பிரதிபலிப்பவர்கள், எப்போதும் மகிழ்ச்சியாயிருப்பார்கள். இதுபோன்ற தாகம் உடையவர்கள் மாத்திரமே 'திருப்தி' அடைவார்கள்! (மத்தேயு 5:6).**

உண்மைதான், பசிதாகம் கொண்டவர்களை மாத்திரமே 'சுபாவமான' (Normal) மனிதர்கள் என கூற முடியும். மாறாக, உணவருந்த பசியில்லாதவர்களை, வியாதி கொண்டவர்கள் என்றே கூற வேண்டும்!

*சுபாவமாக நன்றாய் இருக்கும் யாவருமே, பசியுடையவர்களாய் இருப்பார்கள்! ஆகவே, பசி ஏற்படுவது ஓர் ஆசீர்வாதமான உணர்வு என்றே கூற வேண்டும்!*

*இந்த உலகிலுள்ள ஒவ்வொரு நபருக்கும் 'ஆவிக்குரிய பசி' இருக்கிறது. அதை அவன் சொல்லத் தெரியாவிட்டாலும், அது அவனுக்குள் உண்டு! ஆன்மாவின் பசியை நானே நிறைத்துக்கொள்ள முடியும் என ஒருவன் எண்ணினாலும், ஆவிக்குரிய பசியையும் தாகத்தையும் நிரந்தரமாய் திருப்தி செய்ய* **'தேவன் ஒருவருக்கே'** *சாத்தியமுண்டு! தாவீது இதைக் குறிப்பிடும்போது "மானானது நீரோடைகளை வாஞ்சித்து கதறுவதுபோல, தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்து கதறுகிறது" (சங்.42:1) எனக் கூறினார். அதுஏனென்றால், நாம் எல்லோருமே தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டவர்கள்! என்பதுதான்.*

**'தேவனோடு ஐக்கியம்' வைத்துக்கொள்ளவே நாம் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறோம். "அவருடைய ஐக்கியம் இல்லாமல்" நம்முடைய இருதயம் ஒருபோதும் திருப்தி அடைவதில்லை.**

*ஒரு காந்தத்தை நோக்கி இரும்பு ஈர்க்கப்படுவதுபோல, நம்முடைய ஆத்துமா தேவனிடத்தில் பசிகொண்டு ஈர்க்கப்படுகிறது! ஆகிலும், பாவத்தின் விளைவால், நீங்கள் மாத்திரம் அல்ல இவ்வுலகில் உள்ள அனைவருமே இந்த உலகத்தால் ஈர்க்கப்பட்டு, அதுவே அவர்களின் மாயையான விருப்பமாயிருக்கிறது! அப்படியிருந்தும், இந்த பூமியிலுள்ள யாதொன்றும் அவர்களின் உள்ளான பசியையும் தாகத்தையும் திருப்திப்படுத்த முடியவில்லை என்பதை துரிதமாய் அறிந்து கொள்வார்கள்!*

*உங்களைப்போலவே சங்கீதக்காரன் தாவீதும், பாவ உலகத்தின் ருசியை தேடி ஓடி, தன் ஆத்துமாவில் திருப்தி அடையாமல் "தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும், தண்ணீரற்றதுமான நிலத்திலே, என் ஆத்துமா* **உம்மேல் தாகமாயிருக்கிறது!** *என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது" என முறையிட்டார் (சங்.63:1). நம்மிடமுள்ள ஒரு வஞ்சகம் என்னவெனில் "சந்தோஷத்தை இலக்காய் வைத்து, சந்தோஷத்தை வழங்கும் 'ஊற்றுக்கண்ணை' நாடித் தேடுவதில்லை!"*

*வலியும் - நோயும் இணைந்தே செல்லுகிறது! நோய் மூலகாரண மாயிருக்கிறது.... வலி, அதை வெளிப்படுத்தும் உணர்வாயிருக்கிறது. எனவே, வலியைப் போக்கும் நோயை சுகமாக்காவிட்டால், வலி*

இருந்துகொண்டேதான் இருக்கும். அதுபோல, பாவமே மூல ஆதாரம்! மகிழ்ச்சி இழந்த வாழ்க்கை, பாவத்தை வெளிப்படுத்தும் உணர்வாயிருக்கிறது!

**நோயும் வலியும் சேர்ந்தே இருக்கிறதுபோல, பாவமும் மகிழ்ச்சி இல்லாத வாழ்வும் சேர்ந்தே இருக்கிறது!**

ஏதேன் தோட்டம், பூரண மகிழ்ச்சி நிறைந்த இடமாய் இருந்தது! ஆனால், பாவம் உள்ளே பிரவேசித்ததும், மகிழ்ச்சி வெளியே சென்று விட்டது! இந்த இரண்டும், ஒன்றோடொன்று சேர்ந்து வாசம் செய்வதில்லை. இதை உணர்ந்து, இயேசுவிடம் கிட்டிச் சேர்ந்தவர்களாய் பாவம் கழுவப்பட்டு, அவரது நீதியின்மேல் பசிதாகம் கொண்டிருப்போமானால், நாம் மகிழ்ச்சியினால் திருப்தி அடைவோம்!

- பண்டிதர் பில்லிகிரஹாம் USA

---

## 'இரத்தம் சிந்தி' பாவத்தை ஜெயித்திடுங்கள்!

பாவத்தை மிக எளிதாகக் கருதும் கிறிஸ்தவர்களே அநேகர் இருக்கிறார்கள். இந்த உலகில் எத்தனையோ போராட்டங்கள் உண்டு. அவை அனைத்திலும் சிகரமாய் இருப்பதுதான் பாவத்திற்கு எதிரான போராட்டம்! பாவத்தை நேருக்கு நேராய் போராடிய திரளான பரிசுத்தவான்கள் "இரத்தம் சிந்தி" போராடினார்கள்! (எபி.12:4). ஆனால், 'பாவத்தை ஜெயிப்போம்' என்று முனைந்து நின்ற அநேகர் இரத்தம் சிந்த மனதில்லாமல், பின்வாங்கி தோற்றுப்போனார்களென்றே இந்த வசனம் நம்மை விழிப்பூட்டுகிறது.

**அதுஏனென்றால், பாவத்தை மேற்கொள்வோம் என கூக்குரலிட்ட அநேகர், தாங்களாகவே எதிர்த்து நின்று போராடினார்கள், ஆனால் தோற்றுப்போனார்கள்! நமது ஆண்டவருக்குப் பெயர் யுத்தத்தில் ஜெயித்திடும் சேனைகளின் கர்த்தர் என்பதேயாகும். சேனைகளின் கர்த்தரை துணையாக கொள்ளாமல், வெற்று வீராப்புக் கொண்டவர்கள் கண்டிப்பாய் தோல்வி அடைவார்கள்!**

பாவத்தில் ஜெயம் பெற "சேனைகளின் கர்த்தரை துணையாக கொண்டு ஜெயித்தவர்களே" வேதத்தில் காணப்படுகிறார்கள். இவ்வாறாகவே, எண்ணற்ற பரிசுத்தவான்கள், கர்த்தரின் துணையோடு பாவத்தை ஜெயித்து வாழ்ந்தார்கள் என, நம் சபை சரித்திரம் சாட்சி கூறுகிறது. **'பாவத்தை மேற்கொள்வதை' வெறும் உபதேசமாக** பெருமை பாராட்டுகிறவர்களை விட்டு விலகுங்கள். 'கர்த்தரை தனக்கு முன்பாக' எப்போதும் வைத்திருந்த யோசேப்பு, அகோரமான

*விபச்சார பாவத்தை ஜெயித்தான். அதேசமயம், தன்னுடைய பங்காய்* **'சிறை வாச' கிரயத்தையும்** *செலுத்தினான்! அதுபோலவே, ஜீவனுள்ள தேவனை அண்டியிருப்பதற்குப் பதிலாய் 'சிலை வணக்கம் செய்த' திரள் கூட்டத்திலிருந்து அனனியா, அசரியா, மீஷாவேல் ஆகிய மூன்று வாலிப பக்தர்கள் "தங்களின் உயிரையும் பணயம் வைத்து" சிலை வணங்கும் பாவத்தை ஜெயித்தார்கள்! ஆகிலும், தங்களுடைய பங்காய்* **'எரிகிற அக்கினி சூளையின்' கிரயத்தையும்** *செலுத்திட துணிந்தார்களல்லவா? அதுபோலவே, தேவ தாசனாகிய தானியேல் 'தேவனிடம் ஜெபிக்கக் கூடாது' என்ற ராஜ கட்டளையை, தைரிய நெஞ்சத்தோடு மறுத்துவிட்டான். 'சிங்க கெபிக்கு' பயந்து, ஜெபிக்காமலிருப்பது, கர்த்தருக்கு செய்திடும் துரோகமான பாவமென்று பக்தனாகிய தானியேல் கருதினான். இந்த பாவத்தை எதிர்த்து நின்றதற்காக* **அவர் செலுத்திய கிரயம் 'சிங்க கெபியில்' அவர் வீசி எறியப்பட்ட தண்டனை!**

> **புதிய ஏற்பாட்டில், 'விபச்சார பாவத்தை' கண்டும் காணாமல் விட்டு விட்டு 'அரசனுடைய அங்கீகாரத்தை' பெற்றிட மறுத்துவிட்ட தாசனுடைய பெயர்தான்** ***யோவான் ஸ்நானகன்!*** **இவ்வாறு பாவத்தை எதிர்த்து நின்றதற்கு அவர் செலுத்திய கிரயம் என்ன தெரியுமா? தலை துண்டிக்கப்பட்டார்!**

*இவ்வாறு வேத பக்தர்கள் தவிர, திரளான பக்தர்களின் சரித்திரத்தை நாம் பட்டியலிட முடியும். எபிரெயர் 11:35-ம் வசனம் கூறும்போது, இவர்கள் யாவரும் 'நித்தியத்தின் உயிர்த்தெழுதலை அடையும்படி' விடுதலை பெற சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள்! ஒருவேளை, பாவம் செய்ய சம்மதித்திருந்தால் விடுதலைப் பெற்றிருப்பார்கள். ஆனால் 'தற்காலிக விடுதலையை' ஏற்றுக்கொள்ள மறுத்ததால் சித்திரவதை பண்ணப்பட்டு, கொல்லப்பட்டார்கள்!*

> **ஏனெனில், கிரயம் செலுத்தி அல்லது இரத்தம் சிந்தி பாவத்தை ஜெயித்ததால் "நித்திய உயிர்த்தெழுதல்" தங்களுக்கு உண்டு என்பதை மகிழ்ச்சியான சுவிசேஷமாய் அறிந்திருந்தார்கள்!**

*ஆம், பாவத்தை ஜெயித்து வாழ்வதை வெறும் உபதேசமாய் அல்ல, சேனைகளின் கர்த்தரை துணையாகக் கொண்டு, பரிசுத்தாவியின் பெலத்தால், யுத்தம் செய்து, கிரயம் செலுத்தி (இரத்தம் சிந்தி) ஜெயித்து வாழும் பாக்கியம், புதிய உடன்படிக்கையில் நம் யாவருக்கும் அருளப்பட்டிருக்கிறது!*

*- R.ஸ்டான்லி BYM*

## 'சபையின் புனிதம் காத்திட' தேவனுக்கு ஒருவன் தேவை!

*புதிய உடன்படிக்கையின் தனித்தனி குத்துவிளக்காய் விளங்கிய 7-சபைகளில், 2 நல்ல சபைகளைத் தவிர, மற்ற 5- சபைகளில் ஏற்பட்ட 'சேதமடைந்த திறப்பை' அடைப்பதற்கு ஏற்ற புத்திமதிகளை "சபையின் தூதனுக்கு" தேவன் கூறினார்! (வெளி.2,3). எருசலேம் அலங்கம் (சுவர்) சேதமடைந்த நிலையில், அதை மீண்டும் கட்டியெழுப்பிய நெகேமியாவை நாம் அறிவோம்! அதை மாதிரியாக வைத்தே, எசே.22:30-ம் வசனத்தில் "சிதைந்து போன சுவரை அல்லது அலங்கம் சிதைந்து ஏற்பட்ட திறப்பை (Gap)" தேவனுடைய பாரிசத்தில் நின்று, அந்த 'திறப்பை' அடைத்திட தேவன் இன்றுவரை, செயல்பட்டு வருகிறார்!*

*பவுலின் நாட்களில் துர்க்குணமாகிய 'கொஞ்சம் - Little புளிப்பு' ஏற்படுவதை அகற்றி,* **புளிப்பில்லா அப்பமாய்** *கர்த்தருக்கு முன் வாழ புத்தி கூறினார்! ஆனால் நாம் வாழும் இன்றைய விசுவாசிகளில் பெரும்பாலோர், புளிப்பேறிய துர்க்குணத்துடன் வாழ்வதால் "சுவர் சிதைந்து பெரும் திறப்பு" ஏற்பட்டு விட்டதே! அதைக் களைந்து 'புளிப்பில்லா அப்பமாய்' மாற்றுவதற்கு 'திறப்பில் நின்று' பாடுபட வேண்டிய காலம் இது!*

**நானும், என் குடும்பமும் பரிசுத்தமாயிருந்தால் போதுமென்று எண்ணாமல், தேவனுடைய காரியமாய் நின்று 'சேதமடைந்த சத்தியத்தையும், இழந்த அபிஷேகத்தையும்' பிறருக்காய் மீட்டுத் தருவதற்கு ஜெபிக்கவும், புத்தி சொல்லவும், தூக்கி எடுக்கவும், தேவனுக்கு மனிதர்கள் வேண்டும்!**

*கோலியாத் மூலமாக 'இஸ்ரவேலுக்கு ஏற்பட்ட நிந்தையைக் கண்ட' இளையவன் தாவீது, கர்த்தருடைய ஆவியில் நிறைந்து, அவனுக்கு எதிராக ஓடி வீழ்த்தினான்! தாவீது அன்று கண்டது என்னவெனில் "***யுத்தம் கர்த்தருடையது!***" என்பதுதான் (1சாமு.17:47). ஆகிலும் கர்த்தருடைய நாமத்தில் அன்று அந்த 'ஒரே தாவீது' தவிர, இஸ்ரவேலரில் ஒருவரும் தேவனுடைய பாரிசத்தில் நிற்கவில்லை! அந்த தாவீது மூலமாய், இஸ்ரவேலுக்கு நேரிட இருந்த "நிந்தை" அகன்றது. ஆகவேதான், தாவீதை "என் இருதயத்திற்கு ஏற்றவன்!" எனக்கூறி தேவன் மகிழ்ந்தார்! இன்றும் கர்த்தர், நெகேமியாவைப் போல், தாவீதைப்போல், சத்தியத்திற்கு சேதமடைந்த சுவரை அடைத்திட 'ஒரு மனிதனைத்' தேடுகிறார்! கிறிஸ்தவ ஊழியம் என்ற பெயரில் விதவித ஊழியங்கள் இருந்தாலும் 'சத்தியத்திற்கு ஏற்பட்ட சேதத்தின் திறப்பை அடைப்பதற்கு' ஒரு மனிதனைக் காண்பதுகூட தேவனுக்கு அரிதாகி விட்ட கொடிய காலம் இது!*

*- T.ரத்தினகுமார்*

### பஞ்சாப் மாநில தியாக தீப

# ‘ஜெப வீரன்’ ஜான் ஹைடு!



**18**-ம் நூற்றாண்டை சார்ந்த ஜான் ஹைடு அமெரிக்காவில் வாழ்ந்து, இந்திய தேசத்திற்கு மிஷனெரியாக வந்தார். அவருடைய தந்தை புராட்டஸ்டண்டின் ஒரு பிரிவாகிய ‘பிரஸ்பைடேரியன்’ சபையின் போதகர். அவர் மிகுந்த ஆத்தும பாரம் கொண்டவர். ஆகவே கிறிஸ்து அறியப்படாத இடங்களில், அநேக மிஷனெரிமார்களை தேவன் எழுப்ப வேண்டும் என ஊக்கமாய் ஜெபித்து வந்தார். அவர் மகனாகிய ஜான் ஹைடு கல்லூரி பட்டம் பெற்று, பேராசிரியராக பணியாற்றினார். சொற்ப காலத்தில், பதவியை ராஜினாமா செய்துவிட்டு வேதாகம கல்லூரியில் சேர்ந்தார். அதே கல்லூரியில் படித்த அவருடைய அண்ணன் எட்மண்ட் ஓர் பிரசங்கியாராய் ஊழியம் செய்தார். திடீரென்று அவர் மரிக்கவே, தன் அண்ணன் செய்து வந்த பிரசங்க ஊழியத்தைக் கைக்கொள்ள முயற்சி செய்தார். ஓர் அனுபவம் மிக்க பிரசங்கியாரிடம் ‘தேவ அழைப்பைக் குறித்து’ நீண்ட நேரம் விவாதித்தார். பின் ஜெபித்து, இந்தியாவிற்கு மிஷனெரியாகச் செல்ல முடிவு செய்தார்.

கர்த்தருடைய அழைப்பின்படி 1892-ம் ஆண்டு, இந்திய தேசத்தின் பஞ்சாப் மாநிலத்தில் மிஷனெரி ஊழியம் தொடங்கினார். அங்கிருந்தபோது தன்னுடைய நண்பனிடமிருந்து ஓர் முக்கிய கடிதத்தைப் பெற்றார். அதில் “ஜான் ஹைடு சகோதரா, நீங்கள் ஊழிய பணியை சீரும் சிறப்புமாக செய்வதற்கு முதலாவதாக தேவன் உங்களை பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கும்படி ஜெபித்து பெற்றுக்கொள்ளுங்கள்!” என்று எழுதினார். அந்த கடிதத்தை கோபத்தோடு ஜான் ஹைடு கசக்கி எரிந்தார். அவருடைய சபையின் போதகம் என்னவெனில் “நாம் இரட்சிக்கப்பட்டபோதே பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் சேர்த்து பெற்றுக் கொண்டோம்” என்பதேயாகும். ஆகிலும் தன் நண்பனின் வேண்டுகோளை முற்றிலும் தள்ளிவிடாமல், ஊக்கமாய் ஜெபித்து பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்றுக்கொண்டார்!

பஞ்சாப் மொழியை கற்றுக்கொள்ள அதிகமாய் போராடினார். தனக்கு நேர்ந்த வறுமை, சுற்றுபுற உபத்திரவங்களை சகித்து சில ஆத்துமாக்களை மாத்திரமே அவரால் ஆதாயம் செய்திட முடிந்தது. அதுமுதற்கொண்டு தன் அதிக நேரத்தை பஞ்சாப் மக்களின் இரட்சிப்பிற்காக ஊக்கமாய் ஜெபித்தார். 1891-ம் ஆண்டு துவங்கி கிட்டத்தட்ட எல்லா இரவுமே முழங்காலில் நின்று கண்விழித்து ஜெபித்தார். பாகிஸ்தான் எல்கையிலிருந்த ‘சியால்கோட்’ நகரத்திற்கு 1904-ம் ஆண்டு சென்று அங்கே “பஞ்சாப் ஜெப ஐக்கியத்தை” ஏற்படுத்தினார். அதில் பங்கேற்ற எல்லோருமே தினசரி அரை மணி நேரம் “ஆவிக்குரிய எழுப்புதலுக்காக தொடர்ந்து ஜெபித்தனர். அங்கு அவர் தங்கியிருந்த நாட்களில் ‘தேவனுக்கு தினசரி ஒரு ஆத்துமா’ என தீர்மானித்துச் செய்த ஊழியத்தில் சுமார் 400பேரை கர்த்தருக்குள் கொண்டு வந்தார். அழியும் ஆத்துமாக்களுக்காக அவருடைய அதிகமான நேரத்தை ஜெபத்திற்கு பயன்படுத்தியத்தைக் கண்ட அவரது நண்பர்கள், அவரை “ஜெப வீரன் ஹைடு” என அழைத்து மகிழ்ந்தார்கள். மிகுந்த மனபாரத்தோடு பஞ்சாப் மாநிலத்திற்காகவும் பாகிஸ்தானுக்காகவும் இடைவிடாமல் ஜெபித்த அவரின், ஜெப ஊழியத்தினிமித்தம் இடதுபுறம் இருந்த அவருடைய இருதயம் நகர்ந்து, வலதுபுறம் சென்றுவிட்டதாக மருத்துவர்கள் கூறினர். அவருடைய குறைவான 46-ம் வயதில் தன் எஜமானாகிய கர்த்தரிடம் சென்று விட்டார். அவருடைய தியாக ஊழியத்தால் பஞ்சாப் மாநிலம் மாத்திரமல்லாமல், பாகிஸ்தானிலுள்ள சியால்கோட் மாநிலத்திலும் பல்லாயிரம் மக்கள் கிறிஸ்துவை இரட்சகராய் ஏற்றுக்கொண்டு, வாழ்ந்து வருகிறார்கள்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## வாலிபனே, உலக மாயைக்கு விலகி உன் ஆத்துமாவை காத்துக்கொள்!

ராஜஸ்தான் மாநிலத்தின் பரத்பூர் என்ற இடத்தில் 29 சதுர கி.மீ பரப்பளவுகொண்ட "கலைடா பறவைகள் சரணாலயத்தில்" ஆங்காங்கு நீர்ப்பறவைகள் திரள் கூட்டம் கூட்டமாக இருக்கும்! ஆனால், சைபீரிய நாரைகள் மாத்திரம் முற்றிலும் தனிமையான இடத்தில் சேர்ந்து இருப்பதை கவனித்தோம். அது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த நாரைகளுக்கு அருகாமையில் கொக்குகளோ, கூழக்கடாக்களோ, புள்ளினங்களோ மற்றும் எந்த ஒரு பறவைக்கூட்டங்களோ தென்படவில்லை! அந்த முழு பறவைகள் சரணாலயத்திலும் மேற்குறிப்பிட்ட சைபீரிய நாரைகள் மட்டும் தங்கள் தனித்தன்மையை காண்பித்து நின்றன. 'மாயாபுரி சந்தையிலே' கிறிஸ்தியானும், உண்மை என்ற அவனது தோழனும் எப்படி உலக மக்களிடமிருந்து வேறுபட்டு காணப்பட்டார்களோ, அவ்விதமாகவே அந்த சைபீரிய நாரைகளும் தனித்து காணப்படுவதாகவே கருதினோம். நான் உலகத்தான் அல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல (யோவான் 17:16) என்று இயேசு இரட்சகர் தமது சீடர்களை சுட்டிக்காண்பித்துக் கூறினார். இந்த மாய உலக, கானல் நீர் தடாகத்தில் வந்து இறங்கியுள்ள நாமும், நம்மை இந்த உலகத்துக்கு அந்நியரும், பரதேசிகளுமாக காண்பிக்க வேண்டியதன் அவசியத்தை அந்த நாரைகள் எங்களுக்குச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன. "நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு உங்களை மற்ற ஜனங்களை விட்டு பிரித்தெடுத்தேன்" (லேவி 20:26) என தேவன் கூறினார்!

ஓ, வாலிபனே! இந்த உலக மாயையில் சிக்கிவிடாமல், உங்களை தேவன் பிரித்தெடுக்க நீங்கள் உங்களை ஒப்புக்கொடுப்பது சிறந்த முடிவல்லவா? இந்த உலக அழிவில் சிக்கிக்கொள்ளாதபடி, அதிலிருந்து பிரிந்து வாழ தேவன் உங்களுக்கு கிருபை செய்வாராக!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**